**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கான பகல் நேர பராமரிப்பு மையங்கள்–2016–17 ஆம் நிதியாண்டிற்கான திட்டத் தொடராணை மற்றும் ரூ.29,47,800/– நிதி ஒப்பளிப்பு வழங்குவது – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.73

நாள்: 09–11–2016
துன்முகி, ஐப்பசி 24,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:-

1. அரசாணை(1D) எண்.20, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 18–02–2016.
2. அரசாணை(1டி) எண்.36, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 15–04–2016.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.3998/ மா.தி.ந/2016, நாள் 09.08.2016.

--------

**ஆணை:**

மேலே ஒன்று மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கான பகல் நேர பராமரிப்பு மையங்களான, ஏற்கனவே செயல்பட்டு வரும் ஆந்திர மகிளா சபா, சென்னை, ஆல் கவுசர், திபி–நபுவி ஆராய்ச்சி மையம், வாணியம்பாடி, வேலூர் மாவட்டம்; மயோபதி காப்பகம், திருநெல்வேலி மற்றும் ஜே.கே.மாஸ் பவுண்டேஷன், மதுரை ஆகிய 4 தொண்டு நிறுவனங்களின் மூலம், 2015–16 ம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட தொடராணையும், மற்றும் ஒரு நிறுவனத்திற்கு ரூ.7,36,950/– வீதம், 4 மையங்களுக்கு ரூ.29,47,800/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், தற்போது தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கான கீழ்கண்ட பகல் நேர பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருவதாகவும்,

| வ.எண். | மாவட்டம் | பகல் நேர பராமரிப்பு மையம் |
|---|---|---|
| 1. | வேலூர் | ஆல் கவுசர், திபி–நபுவி ஆராய்ச்சி மையம், வாணியம்பாடி, வேலூர். |
| 2. | திருநெல்வேலி | மயோபதி காப்பகம், வீரவநல்லூர். |
| 3. | மதுரை | ஜே.கே. மாஸ் பவுண்டேஷன், பிள்ளைமார் தெரு, ஆரப்பாளையம். |
| 4. | சென்னை | ஆந்திர மகிளா சபா, சென்னை–28. |

2016–17 ஆம் நிதியாண்டில் இந்நான்கு பகல் நேர பராமரிப்பு மையங்களின் மூலம் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட திட்டத் தொடராணை மற்றும் ஒரு மையத்திற்கு ரூ.7,36,950/– வீதம் நான்கு மையங்களுக்கு ரூ.29,47,800/– நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கான பகல் நேர பராமரிப்பு மையங்களான, **(1)** வேலூர் மாவட்டம், ஆல் கவுசர், திபி–நபுவி ஆராய்ச்சி மையம், வாணியம்பாடி, **(2)** திருநெல்வேலி மாவட்டம், மயோபதி காப்பகம், வீரநல்லூர், **(3)** மதுரை மாவட்டம், ஜே.கே. மாஸ் பவுண்டேஷன், பிள்ளைமார் தெரு, ஆரப்பாளையம் மற்றும் **(4)** சென்னை மாவட்டம், ஆந்திர மகிளா சபா, சென்னை–**28** ஆகிய **4** தொண்டு நிறுவனங்களின் மூலம், **2016–17** ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட திட்ட தொடராணையும், மற்றும் ஒரு நிறுவனத்திற்கு ரூ.7,36,950/– வீதம், **4** மையங்களுக்கு ரூ.**29,47,800/–** (ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து எண்ணூறு மட்டும்) இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு, நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், மேற்படி ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை அரசு மானிய உதவிக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படியும் அரசு மானியம் காலாண்டு அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பயனீட்டுச் சான்றிதழ் பெற்ற பின்னரே அடுத்த காலாண்டிற்கான மானியம் விடுவிக்கப்பட வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**4.** மேலே பத்தி –**3**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> "**2235**–சமூகப் பாதுகாப்பும் நலனும்–**02**–சமூக நலன்–**101**–மாற்றுத் திறனாளிகள் நலன்– பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் – MR– தசைக் கோளாறு நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பகல் நேரப் பராமரிப்பு மையங்களை நிறுவுதல் –**09** – உதவித் தொகை–**01**– நடப்புச் செலவுக்கான உதவித் தொகை.
>
> (த.தொ.கு **2235–02–101–MR–0912**)

**5.** இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

**6.** இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.55074/நிதி(சந)/2016, நாள் **06.11.2016**–ன்படி பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநிலஆணையர், சென்னை–78.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள், சென்னை, வேலூர், மதுரை மற்றும் திருநெல்வேலி, மாவட்டங்கள். (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:–**
நிதி (சமூக நலம்) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

அரசாணை(1D) எண். 73 , மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள் 09–11–2016

**2016–17** ஆம் நிதியாண்டு தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 4 பகல் நேர மையங்களுக்கு வழங்கப்படும் நிதி ஒப்பளிப்பு விவரம்**:–**

| **வ.எண்.** | | **இனங்கள்** | **தேவையான நிதி ஒதுக்கீடு** |
|---|---|---|---|
| 1. | தசைப் பயிற்சியாளர் ஊதியம் ரூ.10,000/– x 12 மாதங்கள் x 2 நபர்கள் | | ரூ.2,40,000/– |
| 2. | காப்பாளர் ரூ.3,000/– x 12 மாதங்கள் x 1 நபர் | | ரூ.36,000/– |
| 3. | வாடகை ரூ.10,000/– x 12 மாதங்கள் | | ரூ.1,20,000/– |
| 4. | சில்லரை செலவினம் ரூ.1,000/– x 12 மாதங்கள் | | ரூ.12,000/– |
| 5. | தசைப் பயிற்சியாளர் போக்குவரத்து செலவினம் ரூ.2,000/– x 2 x 12 மாதங்கள் | | ரூ.48,000/– |
| 6. | குழந்தைகளை அழைத்து வரும் செலவினம் ரூ.50/–x 15 குழந்தைகள் x 25 நாட்கள் x 12 மாதங்கள் | | ரூ.2,25,000/– |
| 7. | பரிசோதனைகள் | | |
| | (அ) | எக்கோ 15 நபர்கள் x ரூ.1,050/– | ரூ.15,750/– |
| | (ஆ) | ஈ.சி.ஜி, 15 நபர்கள் x ரூ.80/– | ரூ.1,200/– |
| | (இ) | மார்பு மற்றும் முதுகு தண்டு எக்ஸ்ரே 15 நபர்கள் x ரூ.800/– | ரூ.12,000/– |
| | (ஈ) | ஏபிஜி (ABG) 15 நபர்கள் x ரூ.500/– | ரூ.7,500/– |
| | (எ) | ஸ்பைரோ மீட் டர் (Spiro meter) 15 நபர்கள் x ரூ.200/– | ரூ.3,000/– |
| | (ஏ) | வாக்சி கிரிப் (Vaxi grip) மருந்து ஊசி மூலம் போடுதல் (15 நபர்கள் x ரூ.600/–) | ரூ.9,000/– |
| | (ஐ) | PFT 15 நபர்கள் x ரூ.500/– | ரூ.7,500/– |
| ஒரு மையத்திற்கு ஒரு வருடத்திற்கான செலவினத் தொகை | | | ரூ.7,36,950/– |
| 4 மையங்களுக்கு ஒரு வருடத்திற்கான செலவினத் தொகை (ரூ.7,36,950/– x 4 = ரூ.29,47,800/–) | | | **ரூ.29,47,800/–** |

(ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து எண்ணூறு மட்டும்)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.